**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No: 22/2015** **நாள் 27.03.2026.**

**பிவாசா.1, திருமதி.புஷ்பா**

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 15ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.**

**<u>குறுக்கு விசாரணை 14ம் எதிர்வாதி தரப்பில்</u>**

இவ்வழக்கில் இறந்துபோன 2ம் எதிர்வாதியான சந்தானகிருஷ்ணன் என்பவரின் வாரிசுதாரர் என்ற முறையில் எங்களை சேர்க்கப்பட்டு நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். என் கணவர் அசல் வழக்கில் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரை பற்றிய விபரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்களை நான் சொல்லி தான் எங்கள் வழக்கறிஞர் தயார் செய்தார். பிராது 2ம் அயிட்ட சொத்தான சர்வே வார்டு சி, பிளாக் 21, டவுண் சர்வே எண்.53 அமைந்துள்ளது என்ற விபரம் சரிதானா என்று கேட்டால் சரிதான். மேற்படி டவுண் சர்வே எண்.53 என்பது சர்க்கார் புறம்போக்கு என்ற விபரமும் எனக்கு தெரியும். வாதி வழக்குரையுடன் சேர்ந்து தாக்கல் செய்துள்ள பிராது வரைபடத்தை நான் பார்த்ததில்லை. பிராதுடன் சேர்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் பிராது 2ம் தபசில் சொத்தில் வடக்கு பக்கம் G1, V1, VWG1 என்ற பகுதியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் அதை அகற்ற வேண்டும் என்று சொல்லி பிராதில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் பிராதில் பரிகாரம் கோரியுள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் /வழக்கறிஞர் பிராது தபசில் சொத்துக்களை பார்வையிட வந்த சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் தாக்கல் செய்திருந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடமான C1, C2 யை நான் படித்து பார்த்துள்ளேனா என்று கேட்டால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி C1, C2 ல் கண்ட விபரங்கள் எனக்கு தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லியுள்ளவாறு பிராது 2ம் அயிட்ட சொத்தின் வழியாக வடக்கே உள்ள கிழமேல் முடங்கியார் ரோட்டுக்கு செல்லமுடியும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதை விட்டால் முடங்கியார் ரோடுக்கு செல்வதற்கு வேறு வழி இல்லை என்றால் சரிதான். 1927ம் ஆண்டுக்குரிய SS.No.261 மற்றும் 1971ம் வருட ஆரம்ப கால நகர அளவை ரீ சர்வே

செய்யப்பட்டு 1994ம் ஆண்டு நகர அளவையிலும் 2ம் தபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு பத்திரக்காளியம்மன் பொட்டல் தெரு என்று நகராட்சி ஆவணங்களில் பதிவு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிராது 2வது தபசில் சொத்து பொது சொத்து என்பதால் தான் அந்த சொத்து வழியாக தான் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு வயர்கள், பாதாள சாக்கடை , பூமிக்கடியில் பதித்து வைத்துள்ள குடிநீர் குழாய்களும் சென்று குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். பிராது 2வது தபசில் சொத்திற்கு வடபக்கம் நாங்கள் குடியிருந்து வரும் கழிவு நீரையும் கடத்தி வருகிறோம் என்றால் சரிதான். ஒரு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்பை 14ம் பிரதிவாதியாகிய நகராட்சி அப்புறப்படுத்தப்பட வேண்டியது நகராட்சியின் கடமை என்று சொன்னால் சரிதான். நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்ற ஒவ்வொன்றாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

**(குறுக்கு விசாரணை வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 27th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.